முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி
O.S.No.496/2021

**23.01.2023 வா.சா.1 திரு.கணேசன்**
பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

வழக்கு சொத்தை எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் தங்கம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் எனது தந்தையுடன் பிறந்த சகோதரி எனக்கு அத்தை ஆவார். மேற்படி தங்கமாளின் கணவர் அழகுமுத்து என்றால் சரிதான். அவர்களுக்குள் திருமண உறவில் குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். எனது பெற்றோர் சப்பானி மற்றும் ஈஸ்வரி ஆவார். அவர்களுக்கு நான் உள்ளிட்ட 6பேர் வாரிசு என்றால் சரிதான். மேற்படி தங்கமாளுக்கு குழந்தை இல்லை என்பதால் சப்பானியின் வாரிசுகளை தனது பிள்ளைகளாக வளர்த்து வந்தார் என்றால் என்னை மட்டும் தான் பிள்ளையாக வளர்த்தார். அழகுமுத்து உயிருடன் இருந்த போது அவரது சொத்துக்களை பொறுத்து **20.04.1959**ல் பதிவு செய்த உயில் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த உயிலின் சரத்து படி அவரது மனைவி தங்கமாள் மறுமனம் செய்து கொண்டாள். அழகுமுத்துவின் சொத்துகளின் தங்கமாளுக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். மேற்படி தங்கமாள் மறுமனம் செய்யாதபட்சத்தில் அழகுமுத்துவின் சொத்துக்களை ஆயுட்காலம் வரை அனுபவித்து வரலாம் என்றும் தங்கமாள் ஆயுளுக்கு பிறகு அழகுமுத்துவின் சொத்துக்கள் சப்பானியின் வாரிசுகளான எங்கள் அனைவருக்கும் கிடைக்கும் என்றால் சப்பானியின் ஆண் வாரிசுகளுக்கு மட்டும் தான் கிடைக்கும். அழகுமுத்து எழுதி வைத்த மேற்படி உயில் பற்றி தங்கமாளுக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த உயிலில் கண்டபடி தங்கமாள் அழகுமுத்து இறந்த பிறகு எந்த மறுமனமும் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த உயிலின் சரத்தை தங்கமாள் ஏற்றுக்கொண்டதால் தான் அந்த உயிலை மாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சப்பானியின் வாரிசுகளான எங்கள் அனைவரையும் தனது பிள்ளையாக ஏற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. என்னை மட்டும் தான் ஏற்றுக் கொண்டார். மேற்படி தங்கமாள் என்னை மட்டும் தான் தனது பிள்ளையாக ஏற்றுக்கொண்டதாக வழக்கிற்காக பொய்

சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பிராதில் எனக்கும் தங்கமாளுக்கும் உள்ள உறவு பற்றி எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.